an extent of 1,190 acres new and to stabilise 2,626 acres of existing wet. It is proposed to consider the scheme for inclusion in the Fourth Five-Year Plan.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்தத் திட்டத்தினல் எவ்வளவு ஆயிரம் எக்கர் நிலங்கள் பயனடையும் என்று ஏதாவது எஸ்டிமேட் தயாரிக்கப் பட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : புதிதாக 1190 ஏக்கர் பாசனவசதி பெறும் வெட் ஆயக்கட்டில் 2,626 ஏக்கர் ஸ்டபிலேஸ்.

Second stage of Sathanur Dam

* 300 *Q*.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) the details of the Second Stage of the Sathanur Dam; and

(*b*) the benefits to accrue therefrom?

The Hon. Sri V. RAMIAH : (*a*) & (*b*)—

The answer [a] is placed on the table of the House.

* 301 *Q*.—Sri K. NARAYANASWAMI PILLAI : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Sathanur Dam II Stage has been completed;

(*b*) whether there is any proposal to take up investigation of the right bank channel of the dam; and

(*c*) if so, when?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) The second stage of the Sathanur Reservoir Project is nearing completion.

(*b*) Not at present.

(*c*) This question does not arise.

திரு. எஸ். முருகையன் : இப்போது கொள்ளளவு 43 லட்சம் கன அடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டாம் நிலே முடிவடைந்த வுடன் 81 லட்சம் கன அடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனல் 5,000 ஏக்கர் தான் மேற்கொண்டு பாசன வசதி செய்ய முடியும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதிகப்படி பாசன வசதி செய்யமுடியாதா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போதுள்ள விவரப்படி இவ்வளவு தான் செய்ய முடியும். மேற்கொண்டு செய்யவேண்டுமென்றல் அதை பரிசீலனே செய்ய வேண்டும். போதுமான இடம் இருந்தால் இன்னும் அதிகமாகச் செய்யலாம். இப்போதுள்ள ஆராய்ச்சிப்படி, ஆராய்ச்சி செய்யப்பட்டு இன்வெஸ்டிகேஷன் முடிந்து திட்டம் இன்று கிட்டத்தட்ட நடைமுறையில் வந்து விட்டது. இதற்கு 5,000 தான் நிர்ணயம் செய் திருக்கிறார்கள்.

---

[a] printed as Appendix II on page 412

[22nd March 1965

திரு. ப. உ. சண்முகம் : எந்தெந்தக் கிராமங்கள் புதிதாகச் சேர்க்கப் படும் என்ற விவரங்களைத் தருவார்களா (?)

THE HON. SRI V. RAMAIAH : "An extent of 5,000 acres under the Tirukkoilur Anicut system will be stabilised". என்று சொல்லப் பட்டிருக்கிறது. தனியாக ஒவ்வொரு கிராமங்களாகச் சொல்லு வதற்கில்லை.

திரு. ம. கமலநாதன் : சிறு சிறு பாசனத் திட்டங்களினால் தான் அதிகமாக உணவு உற்பத்தி பெருகுகிறது என்பதை நாம் அனுபவத்தில் கண்டிருக்கிறோம். அப்படிச் சிறிய நீர்ப்பாசனத் திட்டம் புதிதாக ஏற் படுத்தும்போது சாத்தனூர் அணைக்கட்டு பாதிக்கப்படுகிறது. அதில் தண்ணீர் போவது பாதிக்கப்படுகிறது. அதனால் எவ்வித முன்னேற்ற மும் எங்கள் பகுதியில் காண முடியவில்லை. ஆகவே பாம்பாற்றின் அருகே ஒரு அணை கட்டி அந்தப் பகுதியைப் பாசன வசதியாக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : பாம்பாறு இறுதி வந்து சாத்தனூருக்கு வரக்கூடிய தண்ணீரோடு இணைந்ததாக இருக்கிறது. ஆகவே அங்கு ஒரு அணை கட்டினால் நடைமுறையில் உள்ள சாத்தனூர் அணைக்கட்டு ஆயக்கட்டிற்குத் தீமை வருமா என்பதைப் பொறுத்துப் பார்க்கவேண்டியது. சாத்தனூர் அணை கட்டி முடித்தவுடன் ஒரு ஆண்டு வரைக்கும் அதன் தண்ணீரை எவ்வளவு தூரம் பயன்படுத்தமுடியும், அதிலுள்ள கஷ்டங் கள் என்ன என்று ஆராய்ந்து பார்த்ததற்குப் பிறகு தான் வரத்து வாரிக்கு அணை கட்ட முடியுமா முடியாதா என்று பரிசீலனை செய்யவேண்டும். இரண்டாம் ஸ்டேஜ் ஏற்படும் என்பது திட்டத்தில் இருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : சாத்தனூர் அணையிலிருந்து திருக்கோவிலூர் தாலுகாவிற்கு மட்டும் தண்ணீர் போவதாகச் சொல் கிறார்கள். செஞ்சி, திண்டிவனம் பற்றி சர்க்கார் சிந்தித்ததா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : எல்லாம் சிந்தித்துத்தான் ஒரு முடிவிற்கு வந்து அரசாங்கம் இந்த நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்த அறிக்கையில் 5,000 எக்கர் முன்பே இருக்கக்கூடிய தண்ணீர் கொடுக்கக்கூடிய இடத்தை உறுதிப்படுத்துவது என்றிருக்கிறது. புதிதாக ஏதாவது கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்க இந்தத் திட்டத்தின்கீழ் ஏதாவது வசதி செய்யப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : முன்னாடியே விவசாயம் செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் ஐந்தாறு ஆண்டுகளுக்கு ஒரு தடவை மகசூல் கிடைக்கும். அணை கட்டி இத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதினால் வருடா வருடம் மகசூல் கிடைக்கும். அது தான் இதிலுள்ள லாபம்.

திரு. எஸ். முருகையன் : சாத்தனூர் திட்டம் முதல் கட்ட வேலை முடிந்தவுடன் 43 லட்சம் கன அடி தண்ணீர் தேக்கப்படும் என்றும் இவ் வளவு எக்கர் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டு சாகுபடி செய்து வருகிறார்கள் என்றும் இருக்கிறது. இரண்டாம் கட்டம் முடிந்தவுடன் 81 லட்சம் கன அடி தேக்கப்படும் என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் மீண்டும் 5,000 எக்கர் தான் பாசன வசதி செய்ய முடியும் என்று சொல்லப்படுகிறது. ஒன்றுக்கு 1¾ பாகமாவது இருக்கவேண்டுமே, ஏன் 5,000 எக்கர் என்று சொல்லப்பட்டிருக்கிறது ? இதை விளக்குவார்களா ?

2-30 p.m.

கனம் திரு. வெ. ராமைய்யா : திருக்கோவிலூர் அணைக்கட்டுத் திட்டத் தின்கீழ் 5,000 எக்கர் இரண்டாவது ஸ்டேஜ் கட்டி முடிக்கப்படும்போது சாகுபடி செய்வதற்கான உறுதி செய்யப்படும். இந்த வேலைத் திட்டத்தைப் பொறுத்தவரை, ஒன்றாவது ஸ்டேஜும் இரண்டாவது ஸ்டேஜும் சேர்ந்தால்

22nd March 1965]

தான் சாத்தனூர் அணைக்கட்டு வேலை பூர்த்தியடைந்ததாகக் கருதப்படும். ஒன்றாவது ஸ்டேஜில் போதுமான தண்ணீர் இதற்குக் கிடைக்காது. இரண்டாவது ஸ்டேஜ் முடிந்தால் உபரியாகத் தண்ணீர் கிடைக்கும்.

திரு. ப. உ. சண்முகம் : இரண்டாவது திட்டம் முடிந்தவுடன், திருக்கோவிலூர் பக்கத்திலுள்ள கிராமங்களுக்கு சாகுபடிக்குத் தண்ணீர் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அதாவது இரண்டாவது போகத்திற்கும் தண்ணீர் கிடைக்கும் என்று தெரிகிறது. எங்கள் வடஆர்க்காடு ஜில்லாவைப் பொறுத்தவரையில் இரண்டாவது திட்டத்தில் கூடுதலாக பாதிக்கப்படுமா என்று தெரியவில்லை, இப்போது கொடுக்கப்படுகின்ற தண்ணீரை விட அதிமாகக் கிடைக்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : வட ஆர்க்காடாக இருந்தாலும் சரி, தென்னார்க்காடாக இருந்தாலும் சரி, ஒருவருக்கும் பாதிக்காதவாறு பார்த்து பரிசீலனை செய்து தான் திட்டம் நடத்தப்படும். அணை கட்டும்போதே இந்த நிலைமை இருந்தது. ஆரம்பத்தில் இதற்காக இருந்த கோரிக்கைகளை எல்லாம் பரிசீலனை செய்து திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இது இரண்டு ஸ்டேஜ்கள் என்று சொல்லப்பட்டிருந்தாலும், முதலாவது நமது நிதிநிலைக்குத் தகுந்தவாறு முதல் ஸ்டேஜ் மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது. இரண்டுமே சேர்ந்து தான் எடுத்து நடந்திருக்கவேண்டும். இப்போது இரண்டாவது ஸ்டேஜ் வேலை நடந்து கொண்டிருக்கிறது. இதன் மூலமாகத் திருக்கோவிலூர் அணைக்கட்டின் கீழ் உள்ள 5,000 எக்கர்களுக்கு உபரியாகத் தண்ணீர் கிடைக்கும் என்பதுதான் இதிலுள்ள பலன்.

கருடநதியின் குறுக்கே பாலம்

* 302 கேள்வி—**திருமதி ஏ. மனோன்மணி அம்மாள் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

உளுந்தூர் பேட்டையில் இருந்து திருவெண்ணை நல்லூர் செல்லும் ரோட்டில் உளுந்தூர் பேட்டைக்கு 8-வது மைலில் உள்ள கருட நதியின் குறுக்கே ஒரு பாலம் கட்டும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இல்லை.

திரு. கரு. சிமைச்சாமி : தலைவர் அவர்களே, அங்கு போக்குவரத்து அதிகப்படியாக இருக்கின்ற காரணத்தால் வண்டிகள் போன்ற வாகனங்கள் அங்கே போவதற்கு வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே இதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து இதற்காக ஏதாவது நடவடிக்கை எடுக்க யோசிப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தக் கேள்விக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்ற முறையில் நம்முடைய 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த வேலையைச் சேர்க்க முடியுமா என்று பார்த்தோம். அதற்கான புள்ளிவிவரங்களை எல்லாம் கேட்டோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு 60 கோடி ரூபாய் என்று கொடுத்தால் இந்த வேலை எடுத்துக்கொள்ள முடியும். இப்போதுள்ள நிலைமையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இருக்கின்ற 40 கோடியை வைத்துக்கொண்டு பார்க்கும்போது இந்த வேலையை சேர்ப்பதற்கு முடியாத நிலைதான் இருக்கிறது. இருந்தாலும் இந்தப் பிரச்னையைத் தொடர்ந்து கேள்விகள் மூலமாகத் திரும்ப திரும்பக் கேட்டுக்கொண்டிருப்பதால், இதை எப்படியாவது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முடியுமா என்று பரிசீலனை செய்யும்படி அதிகாரிகளைக் கேட்டிருக்கிறேன் என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.